பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 09 2023 7 15

வெள்ளிக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. மகளிர் இடஒதுக்கீடு மசோதா நேற்று மாநிலங்களவையில் ஒருமனதாக நிறைவேறியது.

2. உத்தரப்பிரதேச மாநிலத்தில் முதலாவது சர்வதேச வர்த்தக கண்காட்சியை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்.

3. ஜி20 குழுவினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை உரையாட உள்ளார்.

4. குற்றச் செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்களை விவாத நிகழ்ச்சிகளில் ஈடுபடச் செய்ய வேண்டாம் என்று தொலைக்காட்சி நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5. இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நேற்று மாநிலங்களவையில் ஒருமனதாக நிறைவேறியது.

அவை நடவடிக்கையில் பங்கேற்ற 214 உறுப்பினர்களும் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதன்மூலம் மக்களவை, மாநில சட்டப்பேரவை மற்றும் தில்லி சட்டப்பேரவையில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநிலங்களவையில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகக் கூறினார்.

நாட்டு மக்களுக்கு புதிய நம்பிக்கையை இது ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்ற அனைத்து அரசியல் கட்சிகளின் நேர்மறை சிந்தனையை இது எடுத்துக்காட்டுவதாக பிரதமர் கூறினார்.

முன்னதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை தாக்கல் செய்து பேசினார்.

நாட்டில் மகளிர் அதிகாரமளித்தலுக்கு இது ஊக்கமளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பேசியபோது, இது மகளிரின் சமூக பொருளாதார அதிகாரமளித்தலுக்கான அரசின் உறுதிப்பாட்டை இம்மசோதா மூலம் அறியப்படுவதாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. மல்லிகார்ஜுன் கார்கே பேசியபோது மகளிர் இடஒதுக்கீட்டின்கீழ், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிஜேபி, திமுக, ஆம் ஆத்மி, பி.ஆர்.எஸ்., ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி, சமாஜ்வாதி, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி உறுப்பினர்களும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்த விவாதத்தில் பங்கேற்று பேசினார்கள்.

மகளிர் இடஒதுக்கீடு மக்களவையில் ஏற்கனவே நிறைவேறியுள்ளது.

<<<<>>>>

உலகில் 3வது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை திகழச் செய்வதில் உத்தரப்பிரதேசம் முக்கிய பங்கு வகிக்கும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

கௌதம்புத்தா நகர் மாவட்டத்தில் உத்தரப்பிரதேசத்தின் முதலாவது சர்வதேச வர்த்தக கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற அம்மாநிலத்தின் இலக்கு நிறைவேறும் என்று தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

பெண் தொழில்முனைவோரின் பங்களிப்பு அதிகரித்துள்ளதை இக்கண்காட்சியில் காணமுடிவதாக அவர் கூறினார்.

இந்த சர்வதேச கண்காட்சி ஜி20-ன் நோக்கத்தை அடையும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச முன்னுரிமைகளை முன்னோக்கி எடுத்துச் செல்லும் என்று குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் 66 நாடுகளைச் சேர்ந்த 400 நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

<<<<>>>>

ஜி20 குழுவினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை உரையாட உள்ளார்.

பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள இந்நிகழ்ச்சியில் ஜி20 உச்சிமாநாட்டின் வெற்றியில் பங்களிப்பு செய்த சுமார் மூவாயிரம் பேருடன் அவர் உரையாட உள்ளார்.

இதில் கடைநிலை ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் தூத்துக்குடியில் புதிய விண்வெளி ஏவுதளம் விரைவில் திறக்கப்படும் என்று மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுகுறித்துப் பேசிய அவர், இதற்காக 90 சதவீத நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இதற்கான எஞ்சியுள்ள பணிகளை விரைவில் நிறைவு செய்யுமாறு தமிழக அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

விண்வெளித் துறையில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை தற்போது 150ஆக அதிகரித்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

சர்க்கரை கையிருப்பு தொடர்பான விவரங்களை வாரந்தோறும் சமர்ப்பிப்பதை மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.

கள்ளச்சந்தையில் சர்க்கரை பதுக்கப்படுவதை தடுக்கும் நோக்கில இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச அளவில் சர்க்கரை விலை அதிகரித்து வந்தபோதிலும், இந்தியாவில் சர்க்கரை விலை கட்டுக்குள் இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதிய அளவு சர்க்கரை கையிருப்பில் இருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கடும் குற்றச் செயல்கள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்களை விவாத நிகழ்ச்சிகளில் ஈடுபடச் செய்ய வேண்டாம் என்று தொலைக்காட்சி நிறுவனங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தகைய நபர்கள் அளிக்கும் கருத்துகள் நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் இடையூறு விளைவிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளது.

அத்துடன் இந்தியாவுக்கும் - வெளிநாடுகளுக்கும் இடையேயான நட்புறவு பாதிக்கப்படுவதாகவும் அது தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சத்யஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நடிகர் சுரேஷ் கோபிக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், திரு. சுரேஷ் கோபியின் திரைப்பட அனுபவம் மதிப்பு மிக்க நிறுவனத்திற்கு மேலும் சிறப்படையச் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய 3 வருட பதவிக்காலம் சிறப்பாக அமைய தாம் வாழ்த்துவதாக திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு பயிர்காப்பீட்டுத்திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில் சம்பா பருவ நெற்பயிரில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட மகசூல் இழப்புக்கு 560 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த பயிர் காப்பீட்டுத்திட்டத்தின்கீழ், அறிவிக்கை செய்யப்பட்ட மாவட்டங்களில் இயற்கை இடர்பாடுகளால் 7 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஏற்பட்ட மகசூல் இழப்பிற்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழஙகப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, 6 லட்சம் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களின் காரணமாக விவசாயிகளின் வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருவதாக வேளாண் துறை இணையமைச்சர் திரு கைலாஷ் சௌத்ரி கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின் தகவல்களை உடனுக்குடன் வழங்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

வேளாண் துறை வருவாய் ஈட்டும் துறையாக உருவெடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்களே காரணம் என்றும் அவர் கூறினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 9 ஆண்டுகளில் விவசாயிகள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<>>>>

இலங்கையின் மகோ பகுதியில் இருந்து அனுராதபுரம் வரையிலான ரயில் வழித்தடத்தில் 66 கிலோ மீட்டர் தொலைவிற்கு சிக்னல் அமைப்பதற்கான பணிகளுக்காக அந்நாட்டு போக்குவரத்து அமைச்சகம் இந்தியாவின் **IRCON** சர்வதேச நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது.

14 புள்ளி 9 மில்லியன் டாலர் மதிப்பிலான இந்த ஒப்பந்தத்தில் இலங்கை போக்குவரத்து அமைச்சர் டாக்டர் பந்துலா குணவர்தனேவும், இந்திய தூதர் திரு. கோபால் பாக்லேவும் கையெழுத்திட்டனர்.

இலங்கைக்கான இந்தியாவின் 318 மில்லியன் டாலர் கடனுதவித் திட்டத்தின் கீழ் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன்மூலம் அப்பகுதியில் போக்குவரத்து வசதிகள் மேம்பட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் அண்டை நாட்டிற்கு இந்தியா அளிக்கும் ஆதரவை பிரதிபலிப்பதாக இந்திய தூதர் தெரிவித்தார்.

இந்திய அரசின் இந்த உதவிக்காக இலங்கை அமைச்சர் திரு. டாக்டர் பந்துலா குணவர்தனே நன்றி தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மொஹாலியில் நடைபெற உள்ள இப்போட்டி, பிற்பகல் மணி ஒன்று முப்பதுக்கு தொடங்குகிறது.

இரு அணிகளும் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்கின்றன.

<<<<>>>>

உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **Antim Panghal** வெண்கலப் பதக்கம் வென்றார்.

செர்பியாவின் பெல்கிரேடில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் 16-6 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்வீடனின் **Emma Jonna Densie**-ஐ வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் **Antim Panghal** பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

<<<<>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

<<<<>>>>

ஆசிய விளையாட்டு மகளிர் கால்பந்து போட்டியில் சீன தைபே 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கேரளா அணி 2-1 என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

<<<<>>>>

ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா – திவிச் சரண் இணை அரை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிப் போட்டியில் இந்த இணை 5-7, 6-4, 10-8 என்ற செட் கணக்கில், ஸ்லோவேனியாவின் **Bor Artnak** – ருமேனியாவின் **Dragos Nicolae** இணையை வென்றது.

**<<<<The End>>>>**